<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP No.55/2021</u>**

எ,ம.சா.2 தேதி. 13.07.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயராமன் | த/பெ, | குமாரசுவாமி |
| வயது | 64 | தொழில் | |
| கிராமம் | சங்கேந்தி, ஆக்கூர். | தாலுக்கா | தரங்கம்பாடி. |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சம்மன் கிடைக்கப்பெற்று அதன் அடிப்படையில் சாட்சியம் சொல்லுகிறேன். எனது வாகனமாக TN 82 H 2237 என்ற இருசக்கர வாகனம் ஆகும். எனது வாகனத்தை எனது மகன் வினோத்குமார் பயன்படுத்தி வருகிறான். அவர் தான் முழுநேரமாக பயன்படுத்தி வருகிறான். எனது மகன் எங்கள் சங்கேந்தி கிராமத்திலிருந்து அவர் வேலை செய்யும் பூம்புகாரில் உள்ள ஐஸ் பிளாண்டிற்கு எடுத்துச்சென்று அங்கே நிறுத்திவிட்டு அவர் ஓட்டிச்செல்லும் மீன் லோடு வண்டியில் ஏற்றிக்கொண்டு கேரளா மற்றும் பெங்களூர் செல்வார். 2ம் எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் கம்பெனியில் விசாரணையாளர் விபத்து குறித்து என்னிடம் விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அப்பொழுது நான் விசாரணை அதிகாரியிடம் எழுதிக்கொடுத்த பதில் கடிதம் ஆகும். அந்த ஆவணம் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அதில் எனது இருசக்கர வாகனம் விபத்தினை ஏற்படுத்தவில்லை என்று தான் கூறியுள்ளேன். விபத்து தேதியில் எனது மகன் இருசக்கரக வாகனத்தை அவன் வேலை பார்க்கும் ஐஸ் பிளாண்ட்டில் விட்டுவிட்டு வேலைக்காக லோடு வண்டியை எடுத்துச்சென்றிருந்தான்.

அந்த சமயத்தில் ஐஸ்பிளாண்ட்டில் தான் எனது இருசக்கர வாகனம் இருந்தது. விபத்து தேதிக்கு பின்னர் 3 நாட்கள் கழித்து அந்த இருசக்கர வாகனத்தை பயன்பாட்டிற்காக ஐஸ்பிளாண்ட் உரிமையாளர் மூலமாக அனுமதிப் பெற்று சாவியை பெற்று இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு மோட்டார் வாகன ஆய்வு மற்றும் காவல்துறைக்கும் கொடுத்துள்ளனர். அதன் பிறகு என் மகனிடம் இருசக்கர வாகனத்தை கொடுத்து அனுப்பினார்கள். நான் ஏன் எனது வண்டி வரவில்லை என்று கேட்ட பிறகுதான் ஒரு வாரம் கழித்து வண்டியை விபத்து வழக்கில் காப்பீடு இருப்பதனால் சேர்த்துள்ளதாக கூறினார்கள். அதன் பிறகு நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வந்து அங்கு விசாரணைக்கு சென்று எனது வண்டி விபத்தினை ஏற்படுத்தவில்லை என்றும், வேறொரு FZ வாகனம் விபத்தை ஏற்படுத்தியது என்றும் கூறினோம். அதன் பிறகு குற்ற வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் என்னை அழைக்கவில்லை.

இந்த வழக்கு சம்பந்தமாக யார் வாகனத்தை எடுத்துச்சென்றார் என்றால் ஐஸ்பிளாண்ட் கம்பெனியில் வேலை செய்யும் புவனேஷ் என்பவர் மூலமாக வெளியே

சென்றுள்ளது என்று தெரிந்து கொண்டேன். விபத்து தேதி அன்று எனது வாகனத்தை அருள்முருகன் என்பவருக்கு நான் கொடுத்து ஓட்ட அனுமதிக்கவில்லை. அவர் யார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து தேதியில் எனது வாகனம் சாலையில் பயணம் செய்யவில்லை. அது எனது மகன் வேலை செய்யும் ஐஸ் பிளாண்ட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில் கௌரி போட்ட இந்த வழக்கானது எனது வாகனம் விபத்தை ஏற்படுத்தாக காரணத்தினால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:—

நான் ஆக்கூரில் டைலர் கடை வைத்து கடையின் உள்ளேதான் வேலை பார்த்து வருகிறேன்,. நான் காலை 09.00மணிக்கு கடைக்கு சென்று இரவு 08.30 மணிக்கு கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு செல்லுவதுதான் எனது வழக்கம். எனது மகன் யாரிடம் வாகனத்தை கொடுக்கிறார், யார் யார் எல்லாம் அந்த வாகனத்தை பயன்படுத்துகிறார்கள் என்றா விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. இந்த விபத்தில் எனது வாகனம் தான் நேரடியாக ஈடுபட்டவில்லை என்று கூறுவது வழக்கிற்காக நஷ்ட ஈடு கொடுப்பதை தவிர்ப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வாகனம் விபத்தில் ஈடுபட்டுள்ளது என்று முதல் தகவல் அறிக்கை பதிந்த விபரம் எப்போது தெரியும் என்றால் 4 நாட்கள் கழித்துதான் தெரியும். எனது வாகனம் விபத்தில் ஈடுபடவில்லை என்ற விபரம் தெரிந்தவுடன் காவல் நிலையத்திலோ, வேறு யாரிடமாவது புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. எனது வாகனம் நிறுத்தி வைக்கப்பட்ட ஐஸ் பிளாண்ட் பெயர் என்னவென்றால் எனது மகனுக்குதான் அது தெரியும்.

நான் நாகப்பட்டினம் காவல் கண்கணிப்பாளரிடம் விசாரணைக்கு சென்றதில் யார் புகார் கொடுத்து விசாரணை செய்தார்கள் என்றால், யார் கொடுத்த புகார் என்று தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் கௌரியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 500 மீட்டர் தொலைவு இருக்கும். கௌரியம்மாள் விபத்து ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் செல்லுவதுபோல் கௌரிக்கும் எனக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக அவரது வீட்டிலிருந்து 500 மீட்டர் துாரத்தில் இருந்தும் அவருக்கு விபத்து ஏற்பட்ட விபரம் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவருக்கு நஷ்ட ஈடு எதுவும் கிடைக்கக்கூடாது என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை விசாரணை செய்த காப்பீட்டு நிறுவன அதிகாரி எந்த இடத்தில் வைத்து விசாரணை செய்தார் என்றால் எனது வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னை காப்பீட்டு நிறுவன அதிகாரி விசாரிக்கவே இல்லை என்றாலும் மனுதாரர்மீது உள்ள முன் விரோதம் காரணமாக என்னை விசாரணை செய்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் வேறொரு வாகனம் மோதியதாக கூறியுள்ள வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. விபத்தில் எனது வாகனம் தான் மோதியது என்றாலும் அதனால் தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்

அறிக்கை ஆகிய இரண்டிலும் எனது வாகன எண் குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. தங்கள் வாகனம் தான் விபத்தில் ஈடுபட்டதால் தாங்களும் காப்பீட்டு நிறுவனமும் தான் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல,.

தாக்கல் செய்யவேண்டியுள்ளதால் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.